# பத்திரிக்கைச் செய்தி

18.10.2021 அன்று காஞ்சிபுரம் சுகாதாரத்துறை அலுவலகத்தில் கல்லூரி, நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களக்கு சுகாதார சான்றிதழ் வழங்க கையூட்டு பெறுவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலை அடுத்து ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காஞ்சிபுரம் பிரிவு அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஆய்வுக்குழு அதிகாரிகளுடன் இணைந்து துணை இயக்குநர், சுகாதார அலுவலகத்தில் நடத்தப்பட்ட திடீர் சோதனையில் திரு.பழனி, துணை இயக்குநர் அவர்களிடமிருந்து கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ. 1,66,910/- திரு.சீனிவாசன், தொகுதி சுகாதார மேற்பார்வையாளர் அவர்களிடமிருந்து கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ. 26,490/-, திரு.இளங்கோ, தொகுதி சுகாதார அலுவலரிடமிருந்து கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.8,900/- என ஆக மொத்தம் ரூ. 2,02,300/- கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பாக 19.10.2021 அன்று திரு.பழனி, துணை இயக்குநர் அவர்களின் இல்லத்தில் நடத்தப்பட்ட சோதனையில் கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ. 3,22,900/- மற்றும் ஐசிஐசிஐ வங்கி லாக்கர் சாவியும் கைப்பற்றப்பட்டது.

தொடர்ச்சியாக இன்று 26.10.2021 திரு.பழனி பெயரில் ஐசிஐசிஐ வங்கி, திருமங்கலம் கிளையில் உள்ள இவருடைய லாக்கரை திறந்து சோதனை செய்து பார்க்கும் போது கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.29,80,500/- மற்றும் 150 சவரன் தங்க ஆபரணங்கள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது, அதில் ரொக்கம் ரூ.29,80,500/- கைப்பற்றப்பட்டது மற்றும் 150 சவரன் தங்க ஆபரணங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

# PRESS NOTE

On 18.10.2021, that and other establishments, the Vigilance & Anti-Corruption Kanchipuram Detachment along with Inspection Cell Officers conducted a surprise check at the Office of the Deputy Director, Health Services, Kanchipuram, and unaccounted money of Rs.1,66,910 was seized from Tr. Palani, Deputy Director, Health Services, unaccounted money of Rs.26,490 seized from Sreenivasan, Block Health Supervisor, Sriperumbudur and Rs.8900 from Tr.Elango, Block Health Officer, Kanchipuram. Totally unaccounted money of Rs.2,02,300 was seized.

In this connection on 19.10.2021, a house search was conducted at the residence of Tr.Palani, Deputy Director, Health Services, Kanchipuram and unaccounted money of Rs. 3,22,900/- and ICICI bank locker key has been seized.

In continuation, today 26.10.2021 joint bank locker of Tr.Palani, Deputy Director, Kanchipuram, at ICICI Bank, Thirumangalam Branch was searched and unaccounted money of Rs.29,80,500/-was seized and 150 sovereign of gold were taken into account.